

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம், பெருங்களூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் திராவிட மாடல் அரசின் சிறப்புமிகு திட்டங்களில் ஒன்றான நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாமை கனிம வளத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்ஆகியோர் தொடங்கி வைத்தனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன. நிகழ்வில் மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், எம்.எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எ.பாலமுருகன், வடவாளம் மணிமாறன், சாமிய்யா, சரண்யா ஜெய்சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சுகாதாரத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர்.



மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியின் விளையாட்டு கிராமமான வடுவூரிலிருந்து சென்று, பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபாடி போட்டியில் தங்கம் வென்று பெருமை சேர்த்துள்ள "அபினேஷ் மோகன்தாஸை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி ராஜா கிராம மக்களோடு இணைந்து பெருமகிழ்வோடு வரவேற்று கௌரவித்தார். ஒன்றிய கழக செயலாளர் ந.கலியபரசு, விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் பள்ளி , கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### 'என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி' எனும் முழக்கத்தோடு அயராது உழைத்து - கழகத் தலைவர் தலைமையில்

# கழக ஆட்சி மீண்டும் அமைந்திட உறுதியேற்போம்!

## திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில் – மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சிறப்புரை!

திருவள்ளூர், நவ. 2- திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி நிர்வாகிகள் இ.குருதாஸ், வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், மு.சுப்பிரமணியம், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்புரையற்றினார்

இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது பேசியதாவது:-

தலைவர் அறிவிப்பின்படி என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 68 ஆயிரம் வாக்கு சாவடிக்களிலும் இலக்கு நிர்ணயித்து வெற்றி பெறுவதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும். எஸ்ஐஆர் எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியலுக்கு வாக்கு சாவடி அளவில் தயார் படுத்தி விவரங்களை சேகரிக்க வேண்டும்.

வரும் டிசம்பர் 10-ஆம் தேதி வரை பாகம் வாரியாக கூட்டம் நடத்தி அனைவரையும் கட்டாயம் இந்த கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். 2021 சட்டமன்ற தேர்தலில் ஒரு பாகத்தில் 500 வாக்குகள் பெற்றிருப்பின் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கூடுதலாக 70 வாக்குகள் பெற்று 570 வாக்குகளாக நிர்ணயித்து செயல்பட வேண்டும்.

2026 தேர்தல் நாள் வரைக்கும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் கவனம் செலுத்தி வெற்றியை உறுதி செய்திட வேண்டும். இந்த வாக்கு சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு எங்கிற திட்டத்தின் மூலம் இணைந்தவர்கள் உள்ளிட்ட குறைந்தது 100 பேர்களை அழைத்து தெருமுனை கூட்டம் நடத்திட வேண்டும்.

அப்போது இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு புதிய வாட்ஸ்அப் குழுவை வாக்குச்சாவடிக்கான பி.டி.ஏ. உருவாக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை குறித்துக் கொள்ள வேண்டும்.

அரசின் சாதனைகளை விளக்கும் துண்டு அறிக்கையை கொடுத்து வீட்டில் உள்ள அரசு திட்டங்களின் பயனாளிகள் விவரம் மற்றும் தேவைகள் ஏதேனும் இருப்பின் அதனை குறித்துக் கொள்ள வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, இறந்தவர்களை பட்டியலில் இருந்து நீக்குவது மற்றும் முகவரி மாற்றம் செய்து வந்தவர்களை சேர்ப்பது இங்கிருந்து சென்றவர்களை நீக்குவது போன்ற செயல்களிலும் கவனமாக செயல்பட வேண்டும்.

தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் விடுபடாமல் பார்த்துக் கொள்வதும், தகுதியற்ற எந்த ஒரு நபரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விடாமல் பார்த்துக் கொள்வதும், அடுத்த ஒரு மாதத்திற்கு எனது இலக்கு என்று செயல்பட வேண்டும்.

என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி' எனும் திராவிட கொள்கைக்கான வெற்றி முழுக்கத்தோடு 2026 சட்டமன்ற தேர்தலில் அயராது உழைத்திடுவோம், ஏழாவது முறையாக கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம்.

இவ்வாறு எமாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் தெரிவித்தார்.

உடன் தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் சேகர், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன்,க. அரிகிருஷ்ணன், எஸ். மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், கிறிஸ்டி அன்பரசு, ஜெயசீலன், வி. வினோத்குமார், ஜி. ரவீந்தரா, சி.ஜே. சீனிவாசன், என்.கிருஷ்ணன், பா.ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பெ.பழனி, டி.ஆர்.கே.பாபு, பி.டி.சந்திரன், சி.ஜே. செந்தில்குமார், கே.ராஜேந்திரன், பா.சம்பத், மா.இரகு, ஏ.எல்.விஜயகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், சரஸ்வதிசந்திரசேகர், வக்கீல் நாகராஜ், வி.எஸ். நேதாஜி, எம்.பன்னீர்செல்வம், நந்தகோபால், சி.சு.விஜயகுமார், மத்தூர் பன்னீர் செல்வம், இ.கே.உதயசூரியன், எஸ்.குமரன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி, தவுட்டுப்பாளையம் ஏசி. நகர் செல்வம் நகர் பகுதியில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலையை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், எம்.எல்.ஏக்கள் ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி செஞ்சி கிழக்கு, மதியம்,மேற்கு, செஞ்சி, அனந்தபுரம் பேரூர் கழகம் சார்பில்செஞ்சியில் நடைபெற்ற வாக்குச்சாவடி முகவர்கள்,டிஜிட்டல் ஏஜென்ட் முகவர்கள் கலந்து கொண்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் செந்தமிழ்ச்செல்வன்,செஞ்சி விஜயகுமார், கார்த்திகேயன், உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மயிலாப்பூர் - பழனி - திருவரங்கம் - திருவண்ணாமலை உள்ளிட்ட

# 10 திருக்கோயில்களில் - தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.3- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயி லில் 2025-26-ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அருகிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டி வசதியினை தொடங்கி வைத்தார். இந்த வசதி முதற்கட்டமாக, பழனி, திருவரங்கம், திருவண்ணாமலை, சுவாமிமலை, சுசீந்திரம் உள்ளிட்ட 10 திருக்கோயி ல்களில் தொடங்கப்பட்டுள்ளது.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஏற்பட்ட பிறகு இந்து சமய அறநிலையத்துறையில் வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளுக்கேற்ப பக்தர்களின் வசதிக்காக புதிய திட்டங்களையும், சேவைகளையும் செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் பதிவேடுகள் சுமார் 4 கோடி பக்கங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் அலுவலக கட்டுப்பாட்டு அறையில் 48 முதுநிலை திரு க்கோயில்களின் கண்காணிப்பு காமிராக்கள் மூலம் திருக்கோயில்களின் அனைத்து சூழ்நிலைகளையும் அறிந்து கொள்வதோடு, பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்வதை உறுதி செய்திடவும், தவறுகள் ஏதேனும் நடைபெற்றால் உடனடியாக சம்மந்தப்பட்ட இணை ஆணையர்களுக்கு தகவல் தெரிவித்து, சரிசெய்கின்ற வகையிலும் பணிகளை செய்துள்ளோம்.

மேலும், முக்கிய திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகளை பாதுகாத்திடும் வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காணிப்பு காமிராக்கள், பாதுகாப்பு எச்சரிக்கை மணி போன்ற வசதிகளுடன் 1800 பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 80 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

திருக்கோயில்களின் வாடகை மற்றும் குத்தகை தொகை வசூல் செய்யும் பணியும் கணணிமயமாக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணிகளை 2021 அக்டோபர் மாதம் மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடங்கினோம். அதன் தொடர்ச்சியாக விரைந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது 2,19,381.19 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு, 1,44,650 எல்லைக் கற்கள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இது இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் சாதனையாக திகழ்கிறது.

அறுபடை வீடுகள், ஆடிமாத அம்மன் திருக்கோயில்கள், புரட்டாசி மாத வைணவ திருக்கோயில்கள், இராமேசுவரம் - காசி போன்ற ஆன்மிகப் பயணங்களுக்கான விவரங்கள் மற்றும் பக்தர்கள் விண்ணப்பிக்கும் முறை போன்றவையும் நவீன தொழில்நுட்ப வசதிகளை கொண்டு கணணிமயமாக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, 2025-26 சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் மயிலாப்பூரில் தொடுதிரை வசதியுடன்கூடியதகவல்பெட்டி வசதி தொடங்கி வைத்துள்ளோம். இன்றைய தினம் பழனி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசு வரர் திருக்கோயில், திருவரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோயில், மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில், காஞ்சிபுரம் தேவராஜசுவாமி திருக்கோயில், சுவாமி மலை சுவாமிநாதசுவாமி திருக்கோயில், பேரூர் பட்டீசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில், சுசீந்திரம் தாணுமாலயசுவாமி திருக்கோயில், புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோயில் ஆகிய 10 திருக்கோயில்களில் தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பக்தர்கள் சம்மந்தப்பட்ட திருக்கோயிலின் வரலாறு, பூஜை விவரங்கள், திருவிழாக்கள், அத்திருக்கோயிலுக்கு அருகிலுள்ள இதரத் திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலா தலங்கள், அவற்றிற்கான போக்குவரத்து வசதிகள், அருகிலுள்ள பூங்காக்கள், அருங்காட்சியம், நூலகங்கள் போன்றவற்றை அறிந்து பயன்படுத்திக் கொள்ள இயலும்.

ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலங்கள், அளவீடு செய்யப்பட்ட திருக்கோயில் நிலங்கள் குறித்த விவரங்கள் அனைத்தும் புத்தகமாக 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை துறையின் இணையதளத்தில் பதிவிடுவதற்கு நீதிமன்றம் என்ன வழிகாட்டுகின்றதோ அதைப் பின்பற்றுவதற்கு துறை தயாராக இருக்கின்றது. இதில் ஒளிவு மறைவு ஏதுமில்லை. இந்து சமய அறநிலையத்துறையைப் பொறுத்தளவில் திறந்த புத்தகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பிரித்தாளுகின்ற தந்திரத்தை கையில் எடுத்து, இனத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்துகின்ற அரசு உலகத்திலேயே இருக்கிறது என்றால் அதற்கு முதல் பரிசு ஒன்றிய அரசுக்கு தரலாம். இது மண் திராவிட மண். எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தின்படி ஆட்சி செய்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆளுகின்ற இந்த மண்ணில் அவர்களது முயற்சி எடுபடாது.

வட இந்தியர்களை நாங்கள் சகோதரத்துவத்துடன் தான் நடத்துகின்றோம். முதலமைச்சர் அவர்கள் நமக்கு நாமே பயணத்தை மேற்கொண்ட போது கூட, வட இந்தியர்களின் கோரிக்கைகளை கேட்டறிவதற்கான நிகழ்ச்சியை சவுகார் பேட்டையில் நடத்தினார்கள். ஆகவே வட இந்தியர்களை நாங்கள் வேற்றுக்கண்ணோடு பார்க்கவில்லை. அவர்களும் மனிதர்கள், எங்களை சார்ந்தவர்கள். எங்கள் ஊனோடும், உணர்வோடும், வாழ்க்கை நடைமுறை களோடும் ஒட்டிப் பிணைந்திருக்கின்றார்கள். ஆகவே அவர்களை பிளவுபடுத்தி, திராவிட முன்னேற்ற கழகத்திற்கு எதிர்ப்பான ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்ற மரியாதைக்குரிய பிரதமர் அவர்களின் முயற்சி தமிழகத்தில் எடுபடாது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை.ரவிச்சந்திரன், திருமதி சி.கல்யாணி, சிறப்பு பணி அலுவலர் திரு.ச. லட்சுமணன், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி திருமதி பெ.க.கவெனிதா, திருக்கோயில் அறங்காவலர்கள் சி.டி.ஆறுமுகம், ப.திருநாவுக்கரசு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி வார்டு எண் 27 ல் வார்டு சிறப்பு கூட்டம் மாமன்ற உறுப்பினர் இரா.ஜெயந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது பகுதி வளர்ச்சி குறித்து கோரிக்கை மனுக்களை அளித்தனர். நிகழ்வில் கோட்டை பகுதி கழக செயலாளர், பொ.இராமச்சந்திரன், உதவிப் பொறியாளர் சோமசுந்தரம், சுகாதார ஆய்வாளர் ஹேமலதா, குழாய் ஆய்வாளர் கௌரிசங்கர், எஸ்.வி.மகாதேவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.